# இந்து பௌத்தர்களிடையே இழையோடியுள்ள மாந்திரீக நம்பிக்கைகள் : இரத்தினபுரி மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டது

**பிரேமகலா, கே., சுகந்தினி, சி.**

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

kesawanpremakala043@gmail.com

*மாந்திரீகம் என்பது கடுமையான மந்திரச் சடங்குகளின் வழியாக நிகழ்த்தப்படுகின்ற ஒரு வழிபாட்டு முறையாகும். நம் மனதை ஒருமுகப்படுத்தி மனத்தால் மந்திரங்களை உருவேற்றி நினைத்த காரியங்களை நிறைவேற்றிக் கொள்வது மாந்திரீகத்தின் செயற்பாடு எனலாம். இத்தகைய மந்திரமும் சமயமும் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. பில்லி, சூனியம், வசியம், ஏவல், செய்வினை, தீய ஆவிகளின் செயற்பாடு, மை பார்த்தல் போன்ற அம்சங்களைக் கொண்ட மாந்திரீகமானது எல்லா சமூகத்தினரிடையேயும் சிறப்பாக பயிலப்பட்டு வரும் அதேவேளை அனைவரது மனதிலும் நம்பிக்கையாக நிலைபெற்றிருக்கின்றது. இங்கு ஆய்வுத் தளமானது சப்ரகமுவ மாகாணத்தின் தலைநகரமான இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் இந்து, பௌத்த மக்களின் வாழ்வியலில் பிணைந்துள்ள மாந்திரீக நம்பிக்கைகளை மட்டும் எல்லையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது. பொதுவாக மாந்திரீகம் என்பதன் விளக்கமும் அதன் உள்ளடக்கமும் தரப்பட்டுள்ளதுடன் இலங்கையில் இந்து பௌத்த மக்களின் பரஸ்பரத்தொடர்பானது அவர்களது மாந்திரீக பயன்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் பாங்கும் எடுத்தியம்பப்பட்டுள்ளது. குறிப்பாக இரத்தினபுரியில் இந்து சமயத்தவருடன் பௌத்த சமயத்தவரின் உறவு எவ்வாறு அமைந்துள்ளது? இங்கு பெரும்பான்மையாக வாழும் பௌத்த சமயத்தவரின் மாந்திரீகம் இந்து மரபை ஒத்திருக்கின்றதா? இல்லையா? போன்ற வினாக்களுக்கு விடை காணும் முகமாக இவ்வாய்வு அமைகின்றது. அத்துடன் இந்து பௌத்த சமூகத்தினரிடையே நிலவுகின்ற மாந்திரீக நம்பிக்கைகள் பெரும்பாலும் ஒத்ததன்மை உடையதே என்பதையும் சமுதாயப் பார்வையில் மாந்திரீகம் தீய செயற்பாடாகவே கருதப்பட்டாலும், இது மக்கள் வாழ்வியலின் நம்பிக்கைசார் கலையாகவே நோக்கப்படுகின்றது என்பதையும் வெளிக் கொணர்வதை நோக்கமாக கொண்டு இந்த ஆய்வு அமைந்துள்ளது எனலாம். இவ் ஆய்வானது வரலாற்றியல் ஆய்வு மற்றும் விபரண ஆய்வு முறையியல்களுக்கமைவாக கட்டமைக்கப் பட்டுள்ளதோடு கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்து, பௌத்த மதங்கள் தொடர்பிலான ஒப்பாய்வுக்கு ஒப்பீட்டு ஆய்வு பயன்படுத்தப்பட்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்விற்கான தரவுகளானவை இலக்கு குழுவினருடனான கலந்துரை யாடல், பிரதேச மக்களின் கருத்துப்பகிர்வுகள், மாந்திரீகர்களின் நேர்காணல்கள் போன்றனவற்றைக் கொண்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் இவ் ஆய்வுடன் சம்பந்தப்பட்ட நூல்கள், ஆய்வேடுகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், வலை ஒளி ஊடாக பெறப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இந்து பௌத்தம் ஆகிய இரு சமயங்களிலும் பின்பற்றப்படும் மாந்திரீக நம்பிக்கைகள் ஒன்றுக்கொன்று முரணில்லாமல் பெரும்பாலும்*

ஒன்றித்து நிற்பது ஆய்வாளனால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு கையாளப்பட்டுள்ள ஒத்த விதி, தொத்து விதி ஆகிய இரு மாந்திரீகக் கோட்பாடும் ஆய்வை நகர்த்திச் செல்வதற்கு வழிவகுக்கின்றது. அந்தவகையில் குறிப்பிட்ட இவ் ஆய்வானது இந்து பௌத்த மக்களின் மாந்திரீகம் பற்றி அறிய விரும்புவோருக்கும் இது தொடர்பாக மேலதிகமாக ஆய்வு செய்வோருக்கும் பயனுடையதாக அமையும் எனலாம்.

**திறவுச்சொற்கள் :** இந்து, பௌத்தம், மந்திரம், மாந்திரீகம், நம்பிக்கை